திரு. என். வரதராஜன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்விக்கு பதில் அளிப்பது மிகவும் சரியானது. தமிழ் நாட்டில் பல பகுதிகளில் குடிநீர் வடிகால் வாரியத்தால் கண்டு பிடிக்கப்பட்ட திட்டங்கள் நடைமுறைக்கு வராமல் இருக்கின்றன. ஆகவே அந்தந்த வட்டாரத்திலுள்ள அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் வைத்து இந்த விஷயத்தில் பைசல் செய்து துரிதமாக திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவர வழி வகைகள் கண்டு பிடிக்கப்பட ஏதாவது முயற்சி செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்த யோசனை நல்ல யோசனை, அரசு இதைப்பற்றி பரிசீலனை செய்யும்.

மருதை ஆற்றின் குறுக்கே சிற்றணை.

* வினா எண் 555—திரு த. ஆறுமுகம்: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) அரியலூர் அருகே உள்ள மருதையாற்றின் குறுக்கே ஒரு சிற்றணை கட்டி சுற்று வட்டார ஏரிகட்கு பாசன நீர் அளிக்கும் வகையில் 1977–78ம் ஆண்டில் சர்வே நடத்தப்பட்டதா?

(ஆ) அத் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) மருதையாற்றின் குறுக்கே சிற்றணை கட்டும் திட்டம் ஆய்வு செய்யப்படவில்லை. ஆனால் மருதையாற்றின் பெரம்பலூர் வட்டத்தில் நீர்த்தேக்கம் ஒன்று அமைக்கும் திட்டம் தலைமைப் பொறியாளரின் (பாசனம்) ஆய்வில் உள்ளது.

திரு. த. ஆறுமுகம்: அரியலூர் வட்டத்தைச் சேர்ந்த மருதையாற்றின் குறுக்கே பெரம்பலூரில் அந்த அணை கட்டப்படும் என்று சொன்னார்கள். அதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு விட்டதா? ஆய்வு செய்யப்பட்டு விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பெரம்பலூர் வட்டம், கொட்டாரை கிராமத்திற்கு அருகில் மருதையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல். இத்திட்டத்தின் உத்தேச மதிப்பீடு ரூ. 169 இலட்சங்கள். சுமார் 6,240 ஏக்கர் நிலங்கள் (புதிய புன்செய் பரப்பு) பயனடையும் என மதிப்பிடப் பட்டுள்ளது.

198. மார்ச் 30]

மருதையாற்றின் உபநதியான அண்ணபாண்டிவாரி ஓடையின் குறுக்கே கடலூர் கிராமத்திற்கு அருகில் (பெரம்பலூர் வட்டம்) நீர்த்தேக்கம் அமைத்தல். திட்டத்தின் உத்தேச மதிப்பீடு ரூ. 144 இலட்சங்கள். புதிய புன்செய் பரப்பு சுமார் 1,556 ஏக்கர் பயனடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பெரம்பலூர் வட்டம், தாத்தையாகுளம் கிராமத்திற்கு அருகில் மருதையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல் திட்டத்தின் உத்தேச மதிப்பீடு ரூ. 380 இலட்சங்கள். சுமார் 6,350 ஏக்கர் புதிய பரப்பு (புன்செய் நிலங்கள்) பாசனம் பெறும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒன்று மட்டும் மூன்று திட்டங்கள் தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளன. இரண்டாவது திட்டத்திற்காக மதிப்பீடு இறுதியாக்கப்பட்டு வருகிறது என்ற தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.

திரு த. ஆறுமுகம்: கடலூர் என்று சொன்னார்கள். அது கூடலூர். கூடலூருக்கு அருகில் அணையைக்கட்ட அந்தக்கிராமத்தில் எங்களுக்கு இந்த அணை தேவை இல்லை. வேண்டாம் என்று சொல்கிறார்கள். ஆகவே, அரியலூர் அருகில் வதையாங் குளத்தின் பக்கத்தில் கட்டினால் அந்தப் பகுதியில் உள்ள பல கிராமங்களுக்கு பாசனவசதி கிடைக்க ஏதுவாகும். எனவே அதைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சே. இராஜா முகமது: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட தாத்தையாகுளம் பக்கத்தில்கட்டுவதற்கான கருத்துரு பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இரண்டாவது திட்டத்தை அங்குள்ள பொதுமக்கள் ஆட்சேபிக்கிறார்கள் என்று குறிப்பு என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபிறகு அதைப் பற்றி விசாரிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட மூன்றாவது திட்டம் இப்போது பரிசீலனையில் இருக்கிறது.

மடிச்சல் கிளைக் கால்வாய் வெட்டும் பணி.

***வினா எண் 556**—திரு பொ. **விஜயராகவன்** மாண்புமிகு நீர்பாசனத்துறை அமைச்சர்: கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நெய்யாறு இடதுகரைகால்வாயில் மடிச்சல்—கிளை கால்வாய் வெட்டப்பட வேண்டிய கோரிக்கை மீது அரசு என்ன முடிவு எடுத்துள்ளது?

(ஆ) அக்கால்வாயை வெட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?